*Journal of Social Review, 10(1), June 2023*
*Department of Social Sciences*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*

# மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் சமுர்த்தி கொடுப்பனவின் பங்கு:

## (முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஹிஜ்ஜிராபுரம் (MU 115) கிராமத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

க.பிரியங்கா[1] & சு. உதயராசா[2]
[1&2]புவியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்

Correspondence: subajiniu@univ.jfn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

*இலங்கையில் வறுமை ஒழிப்பில் முக்கிய அங்கமாக வகிப்பது சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் ஆகும். 2030ம் ஆண்டளவில் இலங்கையினை ஒரு வறுமையற்ற நாடாகக் கொண்டுவருவதே இங்குள்ள அரசின் நோக்கமாகும். அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஹிஜ்ஜிராபுரத்தை அடிப்படையாகக் கொண்டதாக இவ்வாய்வு காணப்படுகின்றது. இவ்ஆய்வானது மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பங்களிப்பினை இணங்காணல், ஹிஜ்ஜிராபுரம் கிராமத்தின் சமுர்த்திக் கொடுப்பனவின் பின்னர் மக்களின் வாழ்க்கைத்தர நிலையினை கண்டறிதல் மற்றும் சமுர்த்தி பயனாளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளினைப் பகுப்பாய்வு செய்தல் போன்றனவாகும். இவ் ஆய்விற்காக முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகளாக நேர்காணல், வினாக்கொத்து, இலக்குகுழுகலந்துரையாடல், நேரடி அவதானிப்பு போன்றனவற்றின் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளாக சமுர்த்தி செயலாற்று அறிக்கைகள், மாவட்ட புள்ளிவிபரவியல் கையேடுகள், கிராமசேவகர் அறிக்கைகள், சமுர்த்தி வங்கி அறிக்கைகள் மூலமும் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இங்கு பெறப்பட்டுள்ள தரவுகளினைக் கொண்டு விபரணப் பகுப்பாய்வு மற்றும் பண்பு சார் பகுப்பாய்வினை பயன்படுத்தி MS Excel மூலம் முடிவுகள் பெறப்பட்டுள்ளதுடன் அட்டவணைகளாகவும் வரைபடங்களாகவும் முடிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. சமுர்த்திக் கொடுப்பனவானது மக்களுக்கு காலதாமதமாக கொடுக்கப்படுகின்றது, குடும்ப அங்கத்தவர்கள் அதிகமாக உள்ளமையினால் கொடுப்பனவுகளின் அளவு போதாமையாக உள்ளமை, தொழில் முயற்சிகளினை மேற்கொள்ளுவதற்கு மூலப்பொருள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றமை, சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களினை மக்கள் சரியான முறையில் மீளச்செலுத்த முடியாமல் காணப்படுகின்றமை, மக்களுக்கு சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றி போதிய தெளிவூட்டல் இன்மை போன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் பிரச்சினைகளினை தீர்த்துக்கொள்வதற்காக மக்களுக்கு உரிய காலத்தில் கொடுப்பனவுகள் கொடுக்கப்படுவதுடன் மக்களுக்கு நிகழ்ச்சித்திட்டம் பற்றி தெளிவூட்டுதல், கடன்களினை மீளசெலுத்துவதற்கான கால அவகாசத்தினை கூட்டுவதன் மூலம் மக்களின் பிரச்சினைகளினை ஓரளவிற்குக் குறைத்துக் கொள்ள முடியும் போன்ற பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.*

திறவுச்சொற்கள்: சமுர்த்தி, நிகழ்ச்சித்திட்டம், வறுமை, வாழ்க்கைத்தரம், பிரதேச செயலர் பிரிவு.

 ISSN (Print): 2448-9204

## ஆய்வு அறிமுகம்

1989 ஆம் ஆண்டு இலங்கை அரசினால் உருவாக்கப்பட்ட ஜனசக்தி திட்டத்தின் தொடர்ச்சியே சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டமாகும். 1995ம் ஆண்டின் 30ம் இலக்க சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த இலங்கை சமுர்த்தி அதிகாரசபை, 1996ம் ஆண்டின் 18ம் இலக்கச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த இலங்கை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை, 2005ம் ஆண்டில் 26ம் இலக்கச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய மூன்று அதிகாரசபைகளையும் மலைநாட்டு கிராம புனரமைப்புத் திணைக்களம், சமுர்த்தி ஆணையாளர் நாயகத்திணைக்களம் ஆகிய இரண்டு திணைக்களங்களையும் உள்ளடக்கியதாக 05 அரசாங்க நிறுவனங்களை ஒருங்கிணைத்து 2013ம் ஆண்டின் 01ம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் மூலம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. வாழ்வின் எழுச்சி ஒழுங்குகளுக்கமைய கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2017 ஜனவரி 03ம் திகதி 1843/47ம் இலக்க வர்த்தகமானி அறிவித்தல் வெளியிட்டதன் பின்னர் இத் திணைக்களம் உத்தியோகபூர்வமாகத் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பின்னர் 2017ம் ஆண்டின் 02ம் இலக்க வாழ்வின் எழுச்சி திருத்திய சட்டத்தின் மூலம் இது சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

1996 டிசம்பர் அளவில் அரசாங்கம் வடக்கு கிழக்கிலுள்ள மாவட்டங்களை தவிர்த்து ஏனைய பிரதேசங்களுக்கு சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியது. சமுர்த்தி வங்கி வேலைத்திட்டத்தின் கீழ் 1997ல் 251 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குமாக 753 சமுர்த்தி வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1998ன் இறுதியில் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அடையாளம் காணப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்காக சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் 13560 கிராம சேவையாளர் பிரிவுகளில் 21257 சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நிலவும் பிரதான சமூக பொருளாதார சிக்கல்களை இல்லாது ஒழிப்பதை குறிக்கோளாகக் கொண்ட குடும்பத் தொகுதியை அடிப்படையாக வைத்து அபிவிருத்தித் திட்டத்தை வகுத்துக்கொள்வதோடு வருமானத்தையும், சமூக அந்தஸ்தத்தையும் உயர்த்துவதன் மூலம் வறுமை ஒழிப்பினை குறைத்தல், வறிய மக்களின் போசனைத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதும் அபிவிருத்தி தேவைகளின் பொருட்டு அவர்களை ஒன்று திரட்டுவதும் மேலும் கட்டாய சேமிப்பின் ஊடாக குறைந்த வருமானம் பெறுவோரை நிதியியல் ரீதியாக பலப்படுத்துதல் மற்றும் வீடமைப்பு லொத்தர் நிதியத்தின் பொருட்டு பங்களிப்புச் செய்துகொடுத்தல். மேலும் சமூக பாதுகாப்பு வேலைத்திட்டத்திற்குப் பங்களிப்பு செய்து கொண்டு அக் குடும்பங்களின் உத்தேசிக்கப்பட்ட மற்றும் உத்தேசிக்கப்படாத அபாயகரமான சந்தர்ப்பங்களில் நிதிப்பலத்தினை வழங்குதல். போன்றனவற்றை பிரதான குறிக்கோளைக் கொண்டு இயங்குகின்றன.


ISSN (Print): 2448-9204

சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டமானது ஆரம்பத்தில் ஒரு குடும்பமொன்று 1000 ரூபாவிற்கு குறைந்த வருமானம் பெற்றால் அவர்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவு கொடுக்கப்பட்டுள்ளது. பின்னர் காலம் செல்லச்செல்ல ஒரு குடும்பம் 3000 ரூபாவிற்கு குறைவாக வருமானம் பெறும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு சமுர்த்தி நிவாரணம் கொடுக்கப்படுகின்றது.

## ஆய்வுப்பிரச்சினை

சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டமானது மக்களுக்கு பல்வேறு பங்களிப்பினை வழங்கி வருகின்றது. இத் திட்டமானது வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்றாகும். இது வறுமையை நீக்கி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதனை நோக்கமாக கொண்டு இயங்குகின்ற போதிலும் அதனை பொது மக்கள் முறையாகப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சவால்களினை எதிர்நோக்கி வருகின்றார்கள் எனலாம். ஹிஜ்ஜிராபுரக் கிராம மக்களின் வாழ்க்கைதர அபிவிருத்தி மிகவும் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. ஆகவே மக்களின் குடும்பங்களில் வறுமைநிலையே காணப்படுகின்றது. இதனால் அங்குள்ள மக்களுக்கு சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டமானது பல்வேறு உதவிகளினை வழங்கி வருகின்றது. இவ்வாறு ஹிஜ்ஜிராபுரக் கிராம மக்கள் நன்மையடைந்த போதிலும் நடைமுறையில் பாரிய சவால்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். இவ்வாறான சவால்கள் பல்வேறு சமூக சிக்கல்களையும் ஏற்படுத்தி விடுகின்றன. இதுவே இவ் ஆய்வினுடைய பிரச்சினையாகும்.

## ஆய்வின் நோக்கங்கள்

ஒரு ஆய்வினுடைய முடிவுகளையும் தீர்வுகளையும் சிறந்த முறையில் அடைந்து கொள்வதற்கு நோக்கங்கள் மிகவும் முக்கியமானதாகும். அதனடிப்படையில் இவ் ஆய்வினுடைய நோக்கங்களாக பின்வருவன காணப்படுகின்றது.

1. ஹிஜ்ஜிராபுரம் கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதில் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டமானது எவ்வாறான பங்களிப்பினை வழங்குகின்றது என்பதனை கண்டறிதல்.
2. ஹிஜ்ஜிராபுரம் கிராமத்தின் சமுர்த்தி கொடுப்பனவின் பின்னர் மக்களின் வாழ்க்கைத்தர நிலையினை கண்டறிதல்
3. ஹிஜ்ஜிராபுரக் கிராமத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளினை இனங்காணல்.
4. ஹிஜ்ஜிராபுரக் கிராமத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் பரிந்துரைகளையும் முன்வைத்தல்.


ISSN (Print): 2448-9204

இலக்கிய மீளாய்வு

The challenges and the Relevant Solutions for the problems faced by Samurdhi Banificiers, in enhancing village level Household income: A Study Based on Malayadigiramam – 03 Sammanthurai Division என்னும் ஆய்வானது மலையடிக்கிராமம் 03 இல் உள்ள சமுர்த்தி பயனாளிகள் அவர்களின் வீட்டுத்துறை வருமானத்தை அதிகரிப்பதில் எதிர்நோக்கும் சவால்களை இனங்காண்பது பற்றி ஆய்வு செய்யும் நோக்கில் M.H.Risla Banu & M.M.S.Hajara அவர்களினால் 2019ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இங்கு சமுர்த்தி திட்டங்கள் மக்களுக்கு பயனளிப்பதை நோக்கமாக கொண்டு காணப்படுகின்ற போதிலும் இங்குள்ள சமுர்த்தி பயனாளிகள் இதனை முறையாக பெற்றுக் கொள்வதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. இங்கு 227 சமுர்த்தி பெறும் குடும்பங்கள் காணப்பட்டாலும் எளிய எழுமாற்று அடிப்படையில் 30 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களில் 25 குடும்பங்களின் மூலம் கிடைக்கப்பெற்ற தரவுகள் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இங்கு முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டன. இங்குள்ள சமுர்த்திப் பயனாளிகள் தமது வீட்டுத்துறை வருமானத்தை அதிகரிப்பதில் பல்வேறு சவால்களை எதிகொள்கின்றார்கள் என்பது இவ்வாய்வின் முடிவாகும். இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள தரவு சேகரிப்பு நுட்பமானது இவ்வாய்வினை மேற்கொள்ள உதவியாக உள்ளது.

A Study on the Effectiveness of Samurdhi Scheme in Eliminating poverty of people in the manmunai south Eruvvilpattu Division Secretariat Division. இவ் ஆய்வானது 2007ம் ஆண்டு Niranjala Sathasivam என்பவரினால் மேற்கொள்ளப்பட்டது. சமுர்த்தி திட்டமானது வறுமை ஒழிப்பு என்னும் விடயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் சமுர்த்தி திட்டத்தின் கீழ் பல செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தாலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவர்களின் விகிதாசாரம் அதிகமானதாகவே காணப்படுகின்றது. எனவே வறுமை ஒழிப்பில் சமுர்த்தி திட்டத்தின் பங்களிப்பு போதுமானதாக அமையவில்லை என்பது இவ் ஆய்வின் ஆய்வுப் பிரச்சினையாக முன்வைக்கப்பட்டுள்ளது. ஆய்வினுடைய குறிக்கோளாக வறுமை ஒழிப்பில் சமுர்த்தி திட்டத்தின் பங்களிப்பு பற்றி அறிதல், குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், தீர்ப்பதற்கான வழிமுறைகளை முன்வைத்தல் என்பன முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வாய்விற்காக முதலாம் நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத்தரவுகளும் பெறப்பட்டு அவற்றினை Excel பொருளினை பயன்படுத்தி புள்ளி விபரவியலை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இவ் ஆய்வினை மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள தரவு சேகரிப்பு நுட்பமுறைகளும், பகுப்பாய்வு முறைகளும் இவ்ஆய்வினை மேற்கொள்வதற்கு மிகவும் உதவியானதாக உள்ளது


ISSN (Print): 2448-9204

A Research Efficiency of Samurdhi program special focus on Karaithivu Divisional Secretariat Division என்னும் ஆய்வானது 2000ம் ஆண்டு Lenugha Tharmalingam என்பவரினால் மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வானது சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் காரைதீவு பிரதேச மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேலும் உயர்த்தி இப் பிரதேச அபிவிருத்திக்கு வழிகோலுவதை நோக்கமாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனடிப்படையில் காரைதீவு பிரதேச செயலகப் பிரிவில் மக்களின் வாழ்க்கைத்தர உயர்வில் சமுர்த்தி திட்டத்தின் செயற்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளும் பயனுகர்களின் சமுர்த்தி பற்றிய அறிவு கருத்துக்களும் ஆராயப்பட்டுள்ளன. இவ் ஆய்வினுடைய நோக்கங்களும் முடிவுகளும் இவ் ஆய்வுக்கு மிகவும் உதவியாகக் காணப்படுகின்றது.


Pirapagary Thangarajah என்பவரினால் 2006ம் ஆண்டு Implemention of Samurdhi scheme and Elimination of poverty in Manmunai North. என்னும் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேசத்தில் அமுல்படுத்தப்படும் சமுர்த்தி திட்டங்களினால் வறியவர்களின் வறுமைநிலை ஒழிக்கப்பட்டு திருப்தி நிலை அடையப்பட்டுள்ளதா என்பதனை அளவிடுவதனை பிரதான நோக்கமாக கொண்டுள்ளது. இவ் ஆய்வுக்காக முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டுள்ளன். ஐந்து புள்ளி லிக்கட் அளவு அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு இடைப்பெறுமான அடிப்படையில் முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இவ் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ள நோக்கம், தரவு சேகரிப்பு முறைகள் இவ் ஆய்வினை மேற்கொள்வதற்கு மிகவும் உதவியானதாக உள்ளது.

Tharsinithevy Vijayaretnam, Ekasingh Benchar and Sivarajah Ponniah போன்றோர்களினால் 2009ம் ஆண்டு Livelihood Aspects of rural Households in Samurdhi program Ampara District Sri Lanka. என்னும் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது அம்பாறை மாவட்டத்தின் வாழ்வாதார முறை, அவற்றுடன் தொடர்புடைய பாதிப்பு, சமாளிக்கும் உத்திகள், வாழ்வாதார சொத்துக்களின் சுயவிபரங்கள் மற்றும் சொத்துக்களின் அடிப்படையில் பாலின வேறுபாடுகளினை நோக்கமாகக் கொண்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வில் எழுமாற்று மாதிரி எடுப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு 100 குடும்பங்கள் எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்டு குடும்பத் தலைவர்கள் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தகவல்கள் Micro soft Excel மற்றும் SPSS மென்பொருளினூடாக பகுப்பாய்விற்கு உட்படுத்தி முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இவ் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ள நோக்கங்களானவை இவ் ஆய்வினை மேற்கொள்வதற்கு மிகவும் உதவியானதாக உள்ளது.


ISSN (Print): 2448-9204

## ஆய்வு முறையியில்

### ஆய்வுப் பிரதேசத்தின் அமைவிடம்




மூலம் : ஆய்வாளரால் ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது (2021)

### தரவு சேகரிப்பு முறைகள்

ஆய்வு ஒன்றினை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு தரவு சேகரிப்பானது மிகவும் முக்கியமானதாகும். இவ் ஆய்வானது பிரதானமாக முதலாம் நிலைத்தரவுகளையும் இரண்டாம் நிலைத்தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### முதலாம் நிலைத்தரவுகள்

இவ் ஆய்வினுடைய நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நேர்காணல், களஅவதானிப்பு, வினாக்கொத்து, இலக்குக் குழு கலந்துரையாடல் மூலம் முதலாம் நிலைத்தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டது.

### நேர்காணல்

இவ் ஆய்விற்கு தேவையான மேலதிக தகவல்கள் இவ் ஆய்வுப் பிரதேசத்தை சேர்ந்த கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி குழு அங்கத்தவர்கள், கிராமத் தலைவர்கள் போன்றோர்களுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் மூலம் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது.

### நேரடி அவதானம்

முதலாம் நிலைத்தரவு சேகரிப்பில் நேரடி அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது. அதாவது சமுர்த்தி பெறும் குடும்பங்களின் வதிவிடங்கள், வாழ்க்கை முறைகள், தொழில் முயற்சிகள் மேற்கொள்ளும் இடங்கள், அடிப்படைவசதிகள் மற்றும் வாழ்வாதார செயற்பாடுகள் போன்றன நேரடி அவதானிப்பின் மூலம் அவதானிக்கப்பட்டுள்ளன.


ISSN (Print): 2448-9204

வினாக்கொத்து (**Scudule)**

இவ்வாய்வுக்குத் தேவையான முதலாம் நிலைத்தரவுகள் கள ஆய்வுகள் மூலம் பெறப்பட்டுள்ளன. அந்த வகையில் ஆய்வாளனால் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் கொண்ட வினாக்கொத்து படிவத்தில் மக்களிடம் வினாக்கள் கேட்கப்பட்டு ஆய்வாளரால் நிரப்பப்பட்டு தரவுகள் பெறப்பட்டுள்ளன. அதாவது சமுர்த்தி கொடுப்பனவினை பெற்ற பின்னர் மக்களின் வாழ்க்கைத்தர நிலையினை அறிந்து கொள்வதற்காக வினாக்கள் கேட்கப்பட்டு 94 குடும்பங்களிலும் இருந்து தகவல்கள் பெறப்பட்டுள்ளன. ஆகவே 94 குடும்பங்களிற்கும் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் உள்ளடங்கிய வினாக்கொத்தினை வழங்கி தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

இலக்குக் குழு கலந்துரையாடல்

இவ் ஆய்வுக்கு தேவையான கூடுதலான தரவுகள் இலக்குக் குழு கலந்துரையாடல் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதாவது ஆய்வுப் பிரதேசத்தில் சமுர்த்தி கொடுப்பனவுகளை பெறும் 386 குடும்பங்கள் காணப்படுகின்றன. இவற்றில் 05 குடும்பங்கள் ஒன்றினைந்து ஒரு குழு என்ற வீதுத்தில் 77 குழுக்கள் காணப்படுகின்றன. அவற்றில் 66 குழுக்கள் மாத்திரமே செயற்பாட்டில் உள்ளன. இங்குள்ள 66 குழுவிடமும் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கேட்டு கலந்துரையாடலின் மூலம் சமுர்த்தி பயனாளிகளின் வாழ்க்கைத்தர நிலை மற்றும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்ற தரவுகள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாறாக முதலாம் நிலைத் தரவுகள் நேர்காணல், நேரடி அவதானம், இலக்குக் குழு கலந்துரையாடல் ஆகிய தரவு சேகரிப்பு நுட்பங்களினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுக்கு தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத்தரவுகள்

இவ் ஆய்வுக்காக இரண்டாம் நிலைத்தரவுகளும் பெறப்பட்டுள்ளன.. இவ் ஆய்வுக்காக பின்வரும் இரண்டாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டுள்ளன.

பெறப்பட்ட தரவு மூலங்கள்

- கிராம சேவையாளர் அறிக்கை (2020)
- சமுர்த்தி செயலாற்று அறிக்கை. (2018)
- முல்லைத்தீவு மாவட்ட புள்ளி விபரக் கையேடு (2019)
- கிராமத்தின் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்ட அறிக்கைகள். (2017,2018,2019,2020)
- அத்துடன் நூல்கள், பத்திரிகைகள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றவற்றில் இருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.


ISSN (Print): 2448-9204

பெறப்பட்ட தரவுகள்

கிராமத்தின் சனத்தொகை விபரங்கள், கிராமத்தில் உள்ள தொழில் வாய்ப்புக்கள், வறுமைக்குட்பட்டவர்களின் விபரங்கள், சமுர்த்திக் கொடுப்பனவு தொடர்பான விபரங்கள், வறுமைப்பட்டவர்களின் வருமானம் தொடர்பான விபரங்கள் போன்ற தரவுகள் இரண்டாம் நிலைத்தரவுகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

தரவுப் பகுப்பாய்வு

ஆய்வுக்காக முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட இவ் இரண்டு தரவுகளும் இரண்டு விதமான பகுப்பாய்வு முறைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுக்காக அளவுசார் மற்றும் பண்பு சார் தரவு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பயன்படுத்தப்பட்ட அளவுசார் தரவுகளாக வறுமைப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை, குடும்ப வருமானம், குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை, கடன் தொகைகள் போன்ற தரவுகள் பெறப்பட்டதுடன், பண்பு சார் தரவுகளாக நேர்காணல், நேரடி அவதானிப்பு போன்றவற்றின் மூலமும் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவற்றினூடாக பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கு பொருத்தமான விபரணரீதியான நுட்பமுறை பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்கு தரவு சேகரிப்பு நுட்பங்களினை பயன்படுத்தி சேகரித்த தரவுகளில் பண்பு ரீதியான தரவுகள் மற்றும் அளவு ரீதியான தரவுகள் விபரண அடிப்படையிலும் Micro soft Excel பயன்படுத்தி அட்டவணை மற்றும் வரைபடங்கள் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

ஆய்வின் முடிவுகள்

1. ஹிஜ்ஜிராபுரம் கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதில் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டமானது எவ்வாறான கொடுப்பனவுகளை வழங்குகின்றது என்பதனை கண்டறிதல்.

ஆய்வுப் பிரதேசத்தில் ஒவ்வொரு வருடமும் சமுர்த்தி மீளாய்வு நடைபெறும் சந்தர்ப்பங்களில் பயனாளிகள் அதிகரித்த வண்ணம் உள்ளார்கள். ஆய்வுப் பிரதேசத்தில் 2018ம் ஆண்டிற்கு முன்னர் 246 சமுர்த்தி பெறும் குடும்பங்கள் காணப்பட்டன. ஆனால் 2019ம் ஆண்டிற்கு பின்னிருந்து தற்காலம் வரை 386 குடும்பங்கள் காணப்படுகின்றார்கள். இது ஆய்வுப்பிரதேசத்தில் வறுமை நிலையினை எடுத்துக்காட்டுகின்றது. மக்களினுடைய ஒவ்வொரு தொழில் முயற்சிகளுக்கும் ஏற்றாற்போல கடன் உதவிகளினை வழங்கி வருகின்றது. அதே நேரம் மக்களினுடைய உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துவதற்கு பல்வேறு அபிவிருத்தி திட்டங்களினையும் மேற்கொண்டு வருகின்றது.


ISSN (Print): 2448-9204

சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள நிவாரணம் தொடர்பான பகுப்பாய்வு

சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் கொடுக்கப்பட்டுள்ள நிவாரணம் ஒவ்வொரு குடும்பங்களினதும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மக்களுக்கு வழங்கப்படுகின்றது. அதனடிப்படையில் கொடுக்கப்படும் நிவாரணமானது சமுர்த்தி பெறும் மக்களின் கட்டாய சேமிப்பு, சமூக பாதுகாப்பு, வீட்டு லொத்தர் போன்ற செயற்பாடுகளுக்காக கழித்து எடுக்கப்பட்டு மீதமுள்ள பணமே மக்களுக்கு வழங்கப்படுகின்றது. இதனை அட்டவணை 4.1 இன் மூலம் காணலாம்.


அட்டவணை 1

| குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) | கட்டாய சேமிப்பு (ரூபா) | சமூக பாதுகாப்பு (ரூபா) | வீட்டு லொத்தர் (ரூபா) | இறுதி பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 - 2 | 1500 | 100 | 100 | 50 | 1250 |
| 3 | 2500 | 200 | 100 | 50 | 2150 |
| 4 மேல் | 3500 | 300 | 100 | 50 | 3050 |

மூலம்: சமுர்த்தி வங்கி அறிக்கை 2020

சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் 2017ஆம் ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரையான காலத்தில் வழங்கப்பட்டுள்ள சமூக பாதுகாப்பு நிதியங்கள்.

சமுர்த்தி பயனாளிகள் குடும்பங்களிடமிருந்தான மாதாந்த பங்களிப்புக்களினை பராமரிப்பதன் மூலம் அவர்களினுடைய வாழ்க்கை முறையானது தீவிரமாக இக் கட்டான நிலையிலுள்ள போது நலனாளிகளுக்கு மீட்சி வழங்குவதன் மூலம் அவர்களினுடைய ஒட்டுமொத்த சமூக பொருளாதார பாதுகாப்பு நலன்களினை முன்னேற்றுதல் சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியத்தின் முக்கியமான நோக்கமாகக் காணப்படுகின்றது.




மூலம் : கள ஆய்வு 2021


ISSN (Print): 2448-9204


சமுர்த்தி பயனாளிகளின் குடும்பம் ஒன்றில் ஏற்படும் திருமணம், பிறப்பு, இறப்பு, கல்வி செயற்பாடுகள், மருத்துவ செலவுகள் போன்ற காரணங்களினால் குடும்பப் பொருளாதாரம் ரீதியாக கீழ்மட்டத்திற்கு விழுவதைத் தவிர்க்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு வேலைத்திட்டங்களின் பொருட்டு ஒவ்வொரு பயனாளிகளுக்கும் பங்களிப்பு செய்து கொள்ளப்படும் இவற்றுக்காகப் பல்வேறு தொகைகள் வழங்கப்படுகின்ற.

அந்த வகையில் ஆய்வுப் பிரதேசத்தில் நான்கு வருடங்களுடன் ஒப்பிடும் போது 2017ம் ஆண்டு அனைத்து விடயங்களும் மிகக் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. 2020ம் ஆண்டிலிலும் 2019ம் ஆண்டிலும் சமூக பாதுகாப்பு நிதியங்கள் அதிகளவாக வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் ஆய்வுப் பிரதேசத்தில் நான்கு வருடங்களுடன் ஒப்பிடும் போது 2017ம் ஆண்டு அனைத்து விடயங்களும் மிகக் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. 2020ம் ஆண்டிலிலும் 2019ம் ஆண்டிலும் சமூக பாதுகாப்பு நிதியங்கள் அதிகளவாக வழங்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் 2017ம் ஆண்டு தொடக்கம் 2020ம் ஆண்டு வரையான காலத்தில் வழங்கப்பட்டுள்ள உதவி திட்டங்கள்.

சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டதினால் மக்களுக்கு மாதாந்தம் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதுடன் அவர்களின் வறுமை நிலையினை குறைத்துக் கொள்வதற்காக குறைந்த வட்டி வீதத்தில் தேவை கருதி பல்வேறு தொகையளவு உதவித்திட்டங்கள் வழங்கப்படுகின்றது. இதன் மூலம் பெற்றுக்கொள்ளும் பணத்தினை மக்கள் தவணைமுறையில் மீண்டும்





மூலம் : கள ஆய்வு 2021


ISSN (Print): 2448-9204

செலுத்த வேண்டும். அதாவது 24 மாதங்களில் அல்லது 18 மாதங்களில் அவர்களின் வருமானத்திற்கு ஏற்ப பணத்தினை மீளச் செலுத்த வேண்டும். 25000 ரூபா தொடக்கம் 200000 ரூபா வரையான தொகைகள் வழங்கப்படுகின்றன. அய்வுப்பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகளில் 24 வீதமான மக்களுக்கு மாத்திரமே 2017 தொடக்கம் 2020 வரையான காலத்தில் சமுர்த்தி கடன் உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது. இவை மக்களின் தொழில் முயற்சிகளுக்காக வழங்கப்படுகின்றன. அந்தவகையில் வரைபடம் மூலம் எத்தனை வீதமான மக்கள் 2017 தொடக்கம் 2020 வரை உதவித்திட்டம் பெற்றுள்ளார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

சமுர்த்தி பயனாளிகள் பல்வேறு காரணங்களிற்காகவே நுண்நிதியினை பெற்றுக் கொண்டுள்ளார்கள். மக்களுக்கான தொழில் முயற்சியினை மேற்கொள்வதற்காகவே இவ்வாறான தொகைகள் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் தொழில் முயற்சியினை மேற்கொண்டு வறுமை நிலையினை இல்லாமல் செய்வதனை நோக்கமாகக் கொண்டு மக்களுக்கு உதவித்திட்டங்கள் வழங்கப்படுகின்றன. ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகள் எவ்வாறான காரணங்களிற்காக நுண்நிதியினை பெற்றுக்கொண்கின்றார்கள் என்பதனை வரைபடம் மூலம் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.





மூலம்: கள ஆய்வு 2021


ISSN (Print): 2448-9204

ஹிஜ்ஜிராபுரம் கிராமத்தின் சமுர்த்தி கொடுப்பனவின் பின்னர் மக்களின் வாழ்க்கைத் தர நிலையினை கண்டறிதல்.


ஆய்வுப் பிரதேசத்தில் 386 குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களாகக் காணப்படுகின்றார்கள். இவர்கள் அனைவரும் சமுர்த்தி பெறும் குடும்பங்களாகக் காணப்படுகின்றார்கள். 386 குடும்பங்களிற்கும் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் மாதாந்த கொடுப்பனவானது கொடுக்கப்படுகின்றது. இதனைவிட இம் மக்களுக்காக சமூக பாதுகாப்பு நிதியமும் வழங்கப்படுகின்றது. மேலும் தொழில் முயற்சியை மேற்கொள்ளும் ஒவ்வொரு குடும்பங்களிற்கும் தேவைக்கு ஏற்றாற்போல குறைந்த வட்டி வீதத்தில் நுண்கடன் வழங்கப்படுகின்றது. அந்தவகையில் 2017ஆம் ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரை ஆய்வுப் பிரதேசத்தில் 94 குடும்பங்களிற்கு குறைந்த வட்டி வீதத்தில் தொழில் முயற்சியை மேற்கொள்ளுவதற்கு கடன் உதவித்திட்டம் வழங்கப்பட்டுள்ளது. அதாவது ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகளில் 24% மான மக்களுக்கு மாத்திரமே கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் கடன் உதவித்திட்டம் பெற்ற பின்னர் அவர்களின் வாழ்க்கை நிலை எவ்வாறு உள்ளது என்பதனை அறிந்து கொள்வதற்காக இப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

நுண்கடன் பெற்ற மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களின் அளவு தொடர்பான பகுப்பாய்வு.




மூலம் : கள ஆய்வு 2021


சமுர்த்தி உதவித்திட்டத்தின் திருப்தி நிலை தொடர்பான பகுப்பாய்வு.




மூலம் : கள ஆய்வு 2021



ISSN (Print): 2448-9204

சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள கடன்களின் மூலம் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுதல் தொடர்பான பகுப்பாய்வு.





மூலம் : கள ஆய்வு 2021

வாழ்க்கைத்தர நிலையினை உயர்த்துவதற்கு வழங்கப்படும் உதவித்திட்டங்களின் அளவு தொடர்பான பகுப்பாய்வு




மூலம் : கள ஆய்வு 2021


வாழ்க்கைத்தர நிலையினை உயர்த்துவதற்கு வழங்கப்படும் கடன்களினை மீள செலுத்துதல் தொடர்பான பகுப்பாய்வு.




மூலம் : கள ஆய்வு 2021



ISSN (Print): 2448-9204

சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள கடன்களின் மூலம் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுதல் தொடர்பான பகுப்பாய்வு





மூலம் : கள ஆய்வு 2021

சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் கிடைத்தும் மக்கள் வறுமை நிலைக்கு தள்ளப்படுதல் தொடர்பான பகுப்பாய்வு.




மூலம் : கள ஆய்வு 2021

சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் கிடைத்தும் மக்கள் பல்வேறு வறுமை நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள். அந்த வகையில் வரைபடம் மூலம் எவ்வாறான வறுமை நிலை காணப்படுகின்றது என காணலாம்.




மூலம் : கள ஆய்வு 2021



ISSN (Print): 2448-9204

**ஹிஜ்ஜிராபுரம் கிராமத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளினை இனங்காணல்.**

ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகள் பல்வேறு பிரச்சினைகளினை எதிர்நோக்குகின்றார்கள். இங்கு 24 வீதமான மக்கள் சமுர்த்தி கடன் உதவித்திட்டங்களினைப் பெற்றுக்கொண்டும் பிரச்சினைகளினை எதிர்நோக்குகின்றார்கள். 76 வீதமான மக்கள் மாதாந்தக் கொடுப்பனவுகளினை மாத்திரம் பெற்றுக்கொண்டு பிரச்சினைகளினை எதிர்நோக்குகின்றார்கள். இவர்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பான விடயங்கள் நேரடி அவதானிப்பு, இலக்கு குழு கலந்துரையாடல், நேர்காணல் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன. அந்தவகையில் பின்வரும் பிரச்சினைகளினை மக்கள் எதிர்கொள்கின்றார்கள்.

சமுர்த்தி கொடுப்பனவானது மக்களுக்கு காலதாமதமாக கொடுக்கப்படுகின்றது.
சமுர்த்தி பெற்றுக்கொள்ளும் பயனாளிகள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளில் ஒன்றாக சமுர்த்தி கொடுப்பனவினைக் காலதாமதமாக வழங்குதல் காணப்படுகின்றது. அந்த வகையில் சமுர்த்தி உதவித்தொகையானது மாதாந்தம் மக்களுக்கு வழங்கப்படும் ஓர் உதவித்தொகையாக உள்ளது. ஆனால் ஆய்வுப் பிரதேசத்தில் இத்தகைய கொடுப்பனவுகளினைக் காலதாமதமாக கொடுக்கின்றார்கள். அதாவது மூன்று மாதங்களிற்கு பின்னர் அல்லது நான்கு மாதங்களிற்குப் பின்னர் மக்களுக்கு வழங்கப்படுவதனைக் காணலாம். ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள அதிகளவான மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். அவர்கள் தமது அன்றாட தேவைகளினை பூர்த்தி செய்வதற்கு சமுர்த்தி உதவித்தொகையையே நம்பி பல குடும்பங்கள் காணப்படுகின்றன.. ஆனால் மக்களுக்கு கொடுப்பனவானது தாமதமாக கொடுப்பதனால் மக்கள் தமது தேவைகளினை திட்டமிட்டு நிறைவேற்ற முடியாத நிலமைக்கு தள்ளப்படுகின்றார்கள்.

குடும்ப அங்கத்தவர்கள் அதிகமாக உள்ளமையினால் கொடுப்பனவுகளின் அளவு போதாமையாக உள்ளமை.




மூலம் : கள ஆய்வு 2021


ISSN (Print): 2448-9204

**சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் கடன் உதவித்திட்டங்களின் அளவு மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்படுகின்றது.**

சமுர்த்திப் பயனாளிகள் தமது வறுமை நிலையினை போக்கி வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்கு பல்வேறு சுயதொழில் முயற்சிகளினை மேற்கொள்கின்றார்கள். இதற்காக சமுர்த்தி வங்கிகளில் நுண்கடன்களினை மக்கள் பெற்றுக்கொள்கின்றார்கள். அதாவது சமுர்த்தி அதிகார சபையினால் குறைந்த வட்டி வீதத்திலேயே நுண்கடன்கள் கிடைக்கின்றன. அதாவது 07 வீதத்தில் நுண்கடன்ககள் வழங்கப்படுகின்றன. 25000 ரூபா தொடக்கம் 200000 ரூபா வரையே கடன்கள் கிடைக்கின்றன. ஆனால் 25000 ரூபா முதலில் கொடுக்கப்பட்டு பின்னர் படிப்படியாகவே கடன்களின் அளவு கூட்டப்படுகின்றது. இங்கு 200000 ரூபா பெறுமதியான கடன் அளவுகளினை விட அதிகளவான பணத்தின பெற்றுக்கொள்வது என்பது கடினமாகும்.

**சமுர்த்திப் பயனாளிகள் தொழில் முயற்சிகளினை மேற்கொள்ளுவதற்கு மூலப்பொருள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது.**

தற்காலத்தில் அனைத்து தொழில் முயற்சியாளர்களும் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினையாக மூலப்பொருள் பற்றாக்குறை காணப்படுகின்றது. அந்த வகையில் ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள சமுர்த்திப் பயனாளிகள் பல்வேறு தொழில் முயற்சிகளினை மேற்கொள்கின்றார்கள். இவ்வாறு இவர்கள் மேற்கொள்ளும் தொழில் முயற்சிகளுக்கு மூலப்பொருட்களினைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிக்கல்களினை எதிர்நோக்குகின்றார்கள். அதாவது ஆய்வுப் பிரதேசத்தில் சிறு கைத்தொழிலினை எடுத்துக்கொண்டால் இங்குள்ள மக்களில் 10 குடும்பங்கள் சிறுகைத்தொழிலினை மேற்கொள்கின்றார்கள். இவர்களில் பாய் பின்னுதல் மற்றும் பனையின் பொருட்களினை வைத்து உற்பத்திகளினை மேற்கொள்ளுதல்.

**சமுர்த்திப் பயனாளிகளுக்கு சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றி போதிய தெளிவூட்டல் இன்மை.**

ஆய்வுப் பிரதேசமானது கல்வியில் பின்தங்கிய ஒரு பிரதேசமாக காணப்படுகின்றது. இவ்வாறான காரணத்தினால் பயனாளிகள் மத்தியில் சமுர்த்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சமுர்த்தி திட்டத்தின் நோக்கம், அதனுடைய தொழிற்பாடுகள், சமுர்த்திப் பயனாளிகளுக்கு என நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படும் சேவைகள் பற்றிய அறிவு மிகவும் குறைவாகக் காணப்படுவதனால் மக்களுக்கு சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றி போதிய தெளிவின்மை காணப்படுகின்றது. இதனைவிட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சமுர்த்தி பயனாளிகளுக்கு சமுர்த்தி திட்டம் பற்றி விழிப்புணர்வு, கருத்தரங்குகள், செயலமர்வுகள் நடாத்துவதில் அசமந்தமான போக்குகளுடன் காணப்படுதல் போன்ற பல்வேறு காரணங்களினால் சமுர்த்திப் பயனாளிகளுக்கு சமுர்த்தி திட்டம் பற்றிய போதிய தெளிவின்மை காணப்படுவதனால் இவர்கள் தங்களுக்கான சேவைகளை முழுமையாகப் பெற முடியாத நிலையிலேயே காணப்படுகின்றார்கள் என்பது நேர்காணலின் போதும் ஆய்வுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட நேரடி அவதானிப்பின் போதும் இலக்கு குழு கலந்துரையாடலின் போதும் இனங்காணப்பட்டுள்ளது.


ISSN (Print): 2448-9204

**சமுர்த்திப் பயனாளிகளின் தேவைகளினை நிறைவேற்றிக்கொள்வதற்கு போதியளவான சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இன்மை.**

ஆய்வுப் பிரதேசத்தில் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தினை சரியான முறையில் நடாத்திச் செல்வதற்கு ஒரேயொரு சமுர்த்தி உத்தியோகத்தரே காணப்படுகின்றார். இதனை விட ஆய்வுப் பிரதேசத்தினை உள்ளடக்கி ஒரு சமுர்த்தி வங்கி காணப்படுகின்றது. இந்த வங்கியானது 16 கிராமங்களினை கொண்டதாகக் காணப்படுகின்றது. இவ் ஒவ்வொரு கிராமங்களுக்கும் ஒவ்வொரு சமுர்த்தி உத்தியோகத்தரே காணப்படுகின்றார்கள். மற்றும் சமுர்த்தி வங்கியில் 05 ஊழியர்கள் மாத்திரமே காணப்படுகின்றார்கள்.

**தொழில்வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படுகின்றமை.**

ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி பெறும் பயனாளிகள் வருமானம் குறைவாக காணப்படும் மக்களாக உள்ளார்கள். இவர்கள் கூலிவேலை, விவசாயம், சிறு கைத்தொழில், மேசன் வேலை போன்ற பல்வேறு வேலைகளினையும் மேற்கொள்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். இவர்களில் அதிகளவான மக்கள் இன்று ஒரு வேலை செய்தால் நாளை என்ன வேலைக்கு செல்வது என்று தெரியாமல் வாழ்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். இவர்கள் அனைவரும் அன்றாடம் வேலை செய்து வரும் பணத்தினையே நம்பி வாழ்பவர்களாக காணப்படுகின்றார்கள். இவ்வாறு ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள சமுர்த்திப் பயனாளிகள் தொழில் வாய்ப்புக்களற்று காணப்படுகின்றார்கள். இவ்வாறு காணப்படும் சந்தர்ப்பங்களில் மக்களின் வாழ்க்கைத்தரத்தின் முன்னேற்ற நிலையானது பின்தங்கிய நிலையிலேயே காணப்படும்.

## தீர்வுகளும் பரிந்துரைகளும்

ஆய்வின் முடிவானது பகுப்பாய்வினூடாக பெறப்பட்டு அதற்கான தீர்வுகளும் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பங்களிப்பானது ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள வறுமைப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்கு சிறப்பான முறையில் பங்களிப்பு செய்கின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் 386 குடும்பங்களில் 94 குடும்பங்களிற்கே சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

அதாவது 24 வீதமான மக்கள் மாத்திரமே கடன் உதவிகளினை பெற்றுக்கொண்டுள்ளார்கள். ஏனைய 76 வீதமான மக்களுக்கு மாதாந்த கொடுப்பனவு மாத்திரமே கொடுக்கப்படுகின்றன. இவ்வாறு சமுர்த்திக் கொடுப்பனவு காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் 24 வீதமான மக்கள் மாத்திரமே தமது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தக்கூடியதற்கான தொழில் முயற்சிகளினை மேற்கொள்ளக்கூடியதாக காணப்பட்டது. ஏனைய 76 வீதான மக்கள் மாதாந்த கொடுப்பனவினை மாத்திரம் பெற்றுள்ளார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சமுர்த்தி பயனாளிகள் பல்வேறு பிரச்சினைகளினை எதிர்நோக்குகின்றார்கள்.


ISSN (Print): 2448-9204

ஆய்வுப்பிரதேசத்தில் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் பல்வேறு உதவிகள் கிடைக்கப் பெற்றாலும் ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகள் பல்வேறு பிரச்சினைகளினை எதிர்நோக்குகின்றார்கள் என்பது இவ் ஆய்வினூடாக கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே மக்களிடம் பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டால் அவர்களின் வாழ்க்கைத்தரமானது முன்னேற்றம் அடையாமல் பின்தங்கியே காணப்படும். மென் மேலும் மக்கள் வறுமை நிலைக்கே தள்ளப்படுகின்றார்கள். ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள சமுர்த்திப் பயனாளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான பரிந்துரைகள் ஆய்வாளரால் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

- ✓ சமுர்த்திக் கொடுப்பனவினை மக்களுக்கு உரிய காலத்தில் கொடுத்தல்.
- ✓ குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல சமுர்த்தி கொடுப்பனவுகளினைக் கொடுத்தல்.
- ✓ சுயதொழில் வாய்ப்புக்களுக்கான கடன் உதவிகளினை அதிகரித்தல்.
- ✓ தொழில் வாய்ப்புக்களுக்கான மூலப்பொருட்களினை மானியமாக அல்லது குறைந்த அளவிலான கடன்களுக்கு வழங்குதல்.
- ✓ பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களினை மீளச்செலுத்தவதற்கான காலத்தினை அதிகரித்தல்.
- ✓ சமுர்த்தி பயனாளிகளுக்கு சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றி போதிய அளவு ஆலோசனைகள் வழங்குதல்.
- ✓ சமுர்த்திப் பயனாளிகளிடத்தில் சேமிப்பு பழக்கத்தினை ஊக்குவித்தல்.
- ✓ சமுர்த்தி உத்தியோகத்தர்களினை வேலைக்கு அமர்த்துதல்

## முடிவுரை

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஹிஜ்ஜிராபுரம் கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் சமுர்த்தி கொடுப்பனவின் பங்கு என்னும் தலைப்பில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள மக்களில் 47 சதவீதமான மக்கள் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தினைப் பெற்றுக்கொள்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். இங்குள்ள மக்களுக்கு தமது வாழ்க்கைத்தர நிலையினை உயர்த்தி கொள்வதற்காக சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் பல்வேறு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது மாதாந்த கொடுப்பனவுகள், சமூக பாதுகாப்பு நிதியங்கள், கடன் உதவித்திட்டங்கள் போன்ற பல்வேறு உதவித்திட்டங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதனை விட ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள சமுர்த்திப் பயனாளிகள் பல்வேறு பிரச்சினைகளினையும் எதிர்நோக்குகின்றார்கள். அதாவது காலதாமதமாகக் கொடுப்பனவினை கொடுத்தல், குடும்ப அங்கத்தவர்கள் அதிகமாக உள்ளமையினால் கொடுப்பனவுகளின் அளவு போதாமையாக உள்ளமை, சமுர்த்தி பயனாளிகள் தொழில்


ISSN (Print): 2448-9204

முயற்சிகளினை மேற்கொள்ளுவதற்கு மூலப்பொருள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றமை, கடன் உதவித்திட்டங்களின் அளவு மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்படுகின்றமை, சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களினை மக்கள் சரியான முறையில் மீளச்செலுத்த முடியாமல் காணப்படுகின்றார்கள், சமுர்த்திப் பயனாளிகளுக்கு சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றி போதிய தெளிவூட்டல் இன்மை, சமுர்த்தி பயனாளிகளின் தேவைகளினை நிறைவேற்றிக்கொள்வதற்குப் போதியளவான சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இன்மை போன்ற பிரச்சினைகளினையும் எதிர்நோக்குகின்றார்கள்.

ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகள் இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளினை எதிர்நோக்கி உள்ளார்கள். இவ்வாறான பிரச்சினைகளினை குறைத்துக் கொள்வதற்காகப் பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ள அதாவது குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல சமுர்த்திக் கொடுப்பனவினை மக்களுக்கு உரிய காலத்தில் கொடுத்தல் மற்றும் சுயதொழில் வாய்ப்புக்களுக்கான கடன் உதவிகளினை அதிகரிப்பதுடன் தொழில் வாய்ப்புக்களுக்கான மூலப்பொருட்களினை மானியமாக அல்லது குறைந்த அளவிலான கடன்களுக்கு வழங்குவதுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களினை மீளச்செலுத்தவதற்கான காலத்தினை அதிகரித்தல், சமுர்த்திப் பயனாளிகளுக்கு சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றி போதிய அளவு ஆலோசனைகள் வழங்குதல், சமுர்த்திப் பயனாளிகளிடத்தில் சேமிப்பு பழக்கத்தினை ஊக்குவித்தல் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களினை வேலைக்கு அமர்த்துதல் போன்ற பரிந்துரைகள் இவ் ஆய்வினூடாக முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு கிராமத்தில் உள்ள மக்களும் கிராமசேவகர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இணைந்து மேலிடத்திற்கு அறியத்தருவதன் மூலம் இவை சார்பாக அரசாங்கத்தின் உள்ள சமுர்த்தி அதிகாரசபையினால் உரிய தீர்வு எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் மக்கள் எந்தவித பிரச்சினைகளுமின்றி வறுமை நிலையில் இருந்து மீண்டு வாழ்க்கைதர நிலையில் முன்னேறுவார்கள். இவ் ஆய்வானது அரசானது வறுமையினை குறைத்துக்கொள்வதற்காக வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்களினை அறிமுகப்படுத்துவதற்கு வழிகாட்டியாகக் காணப்படும் அதே நேரம் அரசானது வறுமையினை குறைத்து வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்கு சாதகமான கொள்கைகளினை உருவாக்குவதற்கு வழிவகுக்கும்

**References:**

Lakshika.L.P.C, P., (2019). Collective action Transaction cost and sustainable livelihood of Samurdhi beneficiaries in srilanka: A case of Gampaha District. *Fifth annual student research sesion* .

Lenugha.T, (2000). A research of efficency of Samurdhi programme special focus on Karaithivu Divisional secretariat Division. *Eastern University srilanka.*


ISSN (Print): 2448-9204

Nadeeka Damayanthi.M.K, Jayanmini Champika.P.A, (2014). An Evaluation of Samurdhu Banks in Poverty Alleviation. *Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute,* pp. 01-103.

Niranjala.S, (2007). A study on the effectiveness of Samurdhischeme in eliminating povertyof people in the Manmunai South Eruvilpattu Divisional Secretariat Division. *Eastern University srilanka.*

Priyanath. H.M.S, Lakshika.L.C.P, (2020). Social capital, Transaction cost and livelihood success: A case of samurdhi community based organization in srilanka. *Internationl journal of management studies and social science research,* 2(2), pp. 69-78.

Purnima.U.G.K, P., (2020). The impact of Samurdhi development program on motivation of women for self employment. *Annual Symposium,* pp. 33-40.

மீலா பேகம். (2015). சமுர்த்தி திட்ட அமுலாக்கத்தில் வீதி மட்ட பணியகத்தினரின் வகிபங்கு விசேட ஆய்வு கல்முனை முஸ்லீம் பிரதேச செயலகப்பிரிவு, *இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம்.*

லும்னா.நூ, நளீபா.ஏ.டபிள்யூ.என். (2014). முறைசாரா கடன் முறைகளினால் சமூகத்தில் ஏற்படும்தாக்கங்கள்: நிந்தவூர் பிரதேச செயலகப்பிரிவை மையப்படுத்தியதோர் சமூகவியல் ஆய்வு. *தென்கிழக்கு பல்கலைக்கழகம். இலங்கை.* ப.12-23.

தர்சினி.தா. (2014). ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதில் நுண்கடன்களின் பங்களிப்பு. *சர்வதேச ஆராய்ச்சி மாநாடு.* 455-463.



ISSN (Print): 2448-9204